جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

தொகுப்பாளர் : அஷ்ஷைக் **அஸ்ஹர் யூஸுஃப்** ஸீலானி

அழைப்பாளர் – அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம், தமிழ் பிரிவு

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் ஓத வேண்டிய அத்தியாயம்:

عَنْ أَبِى الدَّرْدَاءِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِىِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ
أَيَعْجِزُ أَحَدُكُمْ أَنْ يَقْرَأَ فِى لَيْلَةٍ ثُلُثَ الْقُرْآنِ. قَالُوا وَكَيْفَ يَقْرَأُ ثُلُثَ الْقُرْآنِ قَالَ
قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ يَعْدِلُ ثُلُثَ الْقُرْآنِ

நபி (ﷺ) அவர்கள் (மக்களை நோக்கி), ‘ஓர் இரவில் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை உங்களில் ஒருவரால் ஓத முடியாதா?’ என்று கேட்டார்கள். ‘(ஒரே இரவில்) எவ்வாறு குர்ஆனின் மூன்றிலொரு பகுதியை ஓத இயலும்?’ என்று மக்கள் கேட்டார்கள். நபி (ﷺ) அவர்கள் ‘குல் ஹுவல்லாஹு அஹத் (என்று தொடங்கும் 112 ஆவது அத்தியாயம்) குர்ஆனின் மூன்றிலொரு பங்கிற்கு ஈடானதாகும்’ என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர் **அபுத் தர்தா ரலியல்லாஹு அன்ஹு** அவர்கள், முஸ்லிம் 1922).

# இரவில் ஓத வேண்டிய அத்தியாயம்:

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)

| | |
|---|---|
| நபியே?! நீர் கூறுவீராக:<br>அல்லாஹ் அவன் ஒருவனே. | قُلۡ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ |
| அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். | اَللّٰهُ الصَّمَدُ ۚ |
| அவன் (எவரையும்) பெறவுமில்லை;<br>(எவராலும்) பெறப்படவுமில்லை. | لَمۡ يَلِدۡ ۙ وَلَمۡ يُوۡلَدۡ ۙ |
| அன்றியும், அவனுக்கு நிகராக<br>எவரும் இல்லை. | وَلَمۡ يَكُنۡ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۚ |

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் ஸூரதுல் பகராவின் இரண்டு வசனங்களை ஓதுவதன் சிறப்பு:

عن أبي مسعود رَضِيَ اللَّهُ قال قال رَسولَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
مَن قَرَأَ بالآيَتَيْنِ مِن آخِرِ سُورَةِ البَقَرَةِ في لَيْلَةٍ كَفَتاهُ

'அல்பகரா' எனும் (2 வது) அத்தியாயத்தின்
இறுதி இரண்டு வசனங்களை (285, 286)
இரவில் ஓதுகிறவருக்கு அந்த இரண்டுமே போதும்.!
என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

என **அபூ மஸ்வூத்(ரழி)** அறிவித்தார். புஹாரி 5009)

# இரவில் ஸூரதுல் பகராவின் இரண்டு வசனங்களை ஓதுவதன் சிறப்பு:

اٰمَنَ الرَّسُوْلُ بِمَاۤ اُنْزِلَ اِلَيْهِ مِنْ رَّبِّهٖ وَالْمُؤْمِنُوْنَ ؕ كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰۤٮِٕكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ ۟ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ ۟ وَقَالُوْا سَمِعْنَا وَاَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ

2:285.(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார்; (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர்; இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்: “நாம் இறை தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை; (என்றும்) இன்னும் நாங்கள் செவிமடுத்தோம்; (உன் கட்டளைகளுக்கு) நாங்கள் வழிப்பட்டோம்; எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம்; (நாங்கள்) மீளுவதும் உன்னிடமேதான்” என்று கூறுகிறார்கள்.

# இரவில் ஸூரதுல் பகராவின் இரண்டு வசனங்களை ஓதுவதன் சிறப்பு:

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفۡسًا اِلَّا وُسۡعَهَا ‌ؕ لَهَا مَا كَسَبَتۡ وَعَلَيۡهَا مَا اكۡتَسَبَتۡ‌ ؕ رَبَّنَا
لَا تُؤَاخِذۡنَاۤ اِنۡ نَّسِيۡنَاۤ اَوۡ اَخۡطَاۡنَا ‌ۚ رَبَّنَا وَلَا تَحۡمِلۡ عَلَيۡنَاۤ اِصۡرًا كَمَا حَمَلۡتَهٗ
عَلَى الَّذِيۡنَ مِنۡ قَبۡلِنَا ‌ۚ رَبَّنَا وَلَا تُحَمِّلۡنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ‌ ۚ وَاعۡفُ عَنَّا وقفة
وَاغۡفِرۡ لَنَا وقفة وَارۡحَمۡنَا ‌وقفة اَنۡتَ مَوۡلٰٮنَا فَانۡصُرۡنَا عَلَى الۡقَوۡمِ الۡكٰفِرِيۡنَ ۚ

2:286. அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தை கொடுப்பதில்லை; அது சம்பாதித்ததின் நன்மை அதற்கே; அது சம்பாதித்த தீமையும் அதற்கே! (முஃமின்களே! பிரார்த்தனை செய்யுங்கள்:) “எங்கள் இறைவா! நாங்கள் மறந்து போயிருப்பினும், அல்லது நாங்கள் தவறு செய்திருப்பினும் எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களுக்கு முன் சென்றோர் மீது சுமத்திய சுமையை போன்று எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்கள் சக்திக்கப்பாற்பட்ட (எங்களால் தாங்க முடியாத) சுமையை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் பாவங்களை நீக்கிப் பொறுத்தருள்வாயாக! எங்களை மன்னித்தருள் செய்வாயாக! எங்கள் மீது கருணை புரிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலன்; காஃபிரான கூட்டத்தாரின் மீது (நாங்கள் வெற்றியடைய) எங்களுக்கு உதவி செய்தருள்வாயாக!”

# இரவில் ஓத வேண்டியவை

## வீட்டிற்குள் நுழையும் போதும், சாப்பிடும் போதும் بِسْمِ اللَّهِ (பிஸ்மில்லாஹ்) எனக் கூறுவது:

“நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் தமது இல்லத்திற்குள் நுழையும் போதும் உணவு உண்ணும்போதும் அல்லாஹ்வை நினைவுகூர்ந்தால், ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), ‘இன்றைய இரவில் உங்களுக்கு (இங்கே) தங்குமிடமும் இல்லை; உண்ண உணவுமில்லை‘ என்று கூறுகிறான். ஒருவர் இல்லத்திற்குள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவுகூராவிட்டால் ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), ‘இன்றைய இரவில் உங்களுக்குத் தங்குமிடம் கிடைத்துவிட்டது‘ என்று சொல்கிறான்.

(அறிவிப்பவர்: **ஜாபிர் பின் அப்தில்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு**, முஸ்லிம் 4106).

## வீட்டிற்குள் நுழையும் போதும், சாப்பிடும் போதும்
## بِسْمِ اللهِ (பிஸ்மில்லாஹ்) எனக் கூறுவது:

அவர் உணவு உண்ணும்போது அல்லாஹ்வின் பெயர் கூறாவிட்டால்
ஷைத்தான் ‘இன்றைய இரவில் நீங்கள் தங்கும் இடத்தையும்
உணவையும் அடைந்துகொண்டீர்கள்‘ என்று சொல்கிறான்.
இதை ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
மேற்கண்ட ஹதீஸ் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களிடமிருந்தே
மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது.
அதில், ‘அவர் உணவு உண்ணும்போது அல்லாஹ்வின் பெயர் கூறாவிட்டால்,
அவர் இல்லத்திற்குள் நுழையும்போது அல்லாஹ்வின் பெயர் கூறாவிட்டால்
(ஷைத்தான் ‘இந்த இரவில் நீங்கள் தங்குமிடத்தையும் உணவையும்
அடைந்துகொண்டீர்கள்‘ என்று கூறுகிறான்)’
என இடம்பெற்றுள்ளது.கோருகிறேன்.)”

(அறிவிப்பவர்: **ஜாபிர் பின் அப்தில்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு,** முஸ்லிம் 4106).

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூங்கச் செல்லும் போது ஆயதுல் குர்ஸி ஓதுவதன் சிறப்பு:

.....قَالَ لِي: إذَا أوَيْتَ إلى فِرَاشِكَ فَاقْرَأْ آيَةَ الكُرْسِيِّ مِن أوَّلِهَا حتَّى تَخْتِمَ الآيَةَ: {اللَّهُ لا إلَهَ إلَّا هو الحَيُّ القَيُّومُ} (البقرة 255) وقَالَ لِي: لَنْ يَزَالَ عَلَيْكَ مِنَ اللَّهِ حَافِظٌ، ولَا يَقْرَبَكَ شيطَانٌ حتَّى تُصْبِحَ - وكَانُوا أحْرَصَ شيءٍ علَى الخَيْرِ فَقَالَ النبيُّ صَلَّى اللهُ عليه وسلَّمَ: أما إنَّه قدْ صَدَقَكَ وهو كَذُوبٌ، تَعْلَمُ مَن تُخَاطِبُ مُنْذُ ثَلَاثِ لَيَالٍ يا أبَا هُرَيْرَةَ، قَالَ: لَا، قَالَ: ذَاكَ شيطَانٌ.

அறிவிப்பவர் : **அபூ ஹுரைரா (ரழி)** அவர்கள், புஹாரி 2311

# இரவில் தூங்கச் செல்லும் போது ஆயதுல் குர்ஸி ஓதுவதன் சிறப்பு:

.....'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருவதாக அவன் கூறினான்; அதனால் அவனைவிட்டு விட்டேன்!' என்றேன். 'அந்த வார்த்தைகள் என்ன? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'நீர் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்சியை ஆரம்பம் முதல் கடைசிவரை ஓதும்! அவ்வாறு ஓதினால், விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற (வானவர்) ஒருவர் இருந்துகொண்டேயிருப்பார். ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்! என்று என்னிடம் அவன் கூறினான்' எனத் தெரிவித்தேன். நபித்தோழர்கள் நன்மையான(தைக் கற்றுக் கொண்டு செயல் படுத்துவதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் 'அவன் பெரும் பொய்யனாக இருந்தாலும் அவன் உம்மிடம் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான்! மூன்று இரவுகளாக நீர் யாரிடம் பேசி வருகிறீர் என்று உமக்குத் தெரியுமா? என்று கேட்டனர். 'தெரியாது' என்றேன். 'அவன்தான் ஷைத்தான்!' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : **அபூ ஹுரைரா (ரழி)** அவர்கள், புஹாரி 2311

# இரவில் தூங்கச் செல்லும் போது ஆயதுல் குர்ஸி ஓதுவதன் சிறப்பு:

اللهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ اَلْحَیُّ الْقَیُّوْمُ ۚ
لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ
لَهٗ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ
مَنْ ذَا الَّذِیْ یَشْفَعُ عِنْدَهٗۤ
اِلَّا بِاِذْنِهٖ ؕ یَعْلَمُ مَا بَیْنَ اَیْدِیْهِمْ
وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا یُحِیْطُوْنَ
بِشَیْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ
وَسِعَ كُرْسِیُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ
وَلَا یَـــُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِیُّ الْعَظِیْمُ

அல்லாஹ்–அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை;
அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்;
அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா; வானங்களிலுள்ளவையும்,
பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவன் அனுமதியின்றி
அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்?
(படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும்,
அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்;
அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி,
எவரும் அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய
அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும்,
பூமியிலும் பரந்து நிற்கின்றது; அவ்விரண்டையும் காப்பது
அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை
அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன். (அல்பகரா 2: 255)

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

அறிவிப்பவர் : **அபூ ஹுரைரா (ரழி)** அவர்கள், புஹாரி 2311

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூங்கச் செல்லும் போது ஓத வேண்டிய 3 அத்தியாயங்கள்:

عَنْ عَائِشَةَ رضي الله عنها قالت أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ
كَانَ إِذَا أَوَى إِلَى فِرَاشِهِ كُلَّ لَيْلَةٍ جَمعَ كَفَّيْهِ ثُمَّ نَفَثَ فِيهِمَا
فَقَرَأَ فِيهِمَا قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ وَقُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ وَقُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ
ثُمَّ يَمْسَحُ بِهِمَا مَا اسْتَطَاعَ مِنْ جَسَدِهِ يَبْدَأُ بِهِمَا
عَلَى رَأْسِهِ وَوَجْهِهِ وَمَا أَقْبَلَ مِنْ جَسَدِهِ يَفْعَلُ ذَلِكَ ثَلَاثَ مَرَّاتٍ

அறிவிப்பவர்: **ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்,** (புஹாரி 5017)

## இரவில் தூங்கச் செல்லும் போது ஓத வேண்டிய 3 அத்தியாயங்கள்:

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது நபி (ஸல்) அவர்கள் தமது படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தமது உள்ளங்கைகளை இணைத்து, அதில் குல் ஹுவல்லாஹு அஹத்', குல் அஊது பிரப்பில் ஃபலக்', குல் அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய (112, 113, 114) அத்தியாயங்களை ஓதி ஊதிக்கொள்வார்கள். பிறகு தம் இரு கைகளால் (அவை எட்டும் அளவிற்கு) தமது உடலில் இயன்ற வரையில் தடவிக் கொள்வார்கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக்கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்.

அறிவிப்பவர்: **ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்,** (புஹாரி 5017)

# இரவில் தூங்கச் செல்லும் போது ஓத வேண்டிய 3 அத்தியாயங்கள்:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)

| | |
|---|---|
| நபியே?! நீர் கூறுவீராக:<br>அல்லாஹ் அவன் ஒருவனே. | قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ |
| அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். | اَللّٰهُ الصَّمَدُ ۚ |
| அவன் (எவரையும்) பெறவுமில்லை;<br>(எவராலும்) பெறப்படவுமில்லை. | لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ |
| அன்றியும், அவனுக்கு நிகராக<br>எவரும் இல்லை. | وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۚ |

112. ஸூரத்துல் இஃக்லாஸ்(ஏகத்துவம்)

# இரவில் தூங்கச் செல்லும் போது ஓத வேண்டிய 3 அத்தியாயங்கள்:

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)

| | |
|---|---|
| நபியே!) நீர் சொல்வீராக: அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். | قُلۡ اَعُوۡذُ بِرَبِّ الۡفَلَقِۙ |
| அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும் | مِنۡ شَرِّ مَا خَلَقَۙ |
| இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும் | وَمِنۡ شَرِّ غَاسِقٍ اِذَا وَقَبَۙ |
| இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும், | وَمِنۡ شَرِّ النَّفّٰثٰتِ فِى الۡعُقَدِۙ |
| பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போதுண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்). | وَمِنۡ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ |

113 ஸூரத்துல் ஃபலக்(அதிகாலை)

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இரவில் தூங்கச் செல்லும் போது ஓத வேண்டிய 3 அத்தியாயங்கள்:

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)

| | |
|---|---|
| قُلۡ اَعُوۡذُ بِرَبِّ النَّاسِۙ | நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். |
| مَلِكِ النَّاسِۙ | அவனே) மனிதர்களின் அரசன்; |
| اِلٰهِ النَّاسِۙ | அவனே) மனிதர்களின் நாயன். |
| مِنۡ شَرِّ الۡوَسۡوَاسِ ۙ الۡخَـنَّاسِ ۙ | பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் (இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்). |
| الَّذِىۡ يُوَسۡوِسُ فِىۡ صُدُوۡرِ النَّاسِۙ | அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகிறான். |
| مِنَ الۡجِنَّةِ وَالنَّاسِ | இத்தகையோர்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர். |

114. ஸூரத்துந் நாஸ்(மனிதர்கள்)

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில்

سُبْحَانَ اللّٰهِ (ஸுப்ஹானல்லாஹ் 33), அல்லாஹ் தூயவன்

اَلْحَمْدُ لِلّٰهِ (அல்ஹம்துலில்லாஹ் 33), எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

اَللّٰهُ أَكْبَرُ (அல்லாஹு அக்பர் 34) அல்லாஹ் மிகப் பெரியவன்

## சொல்வதன் சிறப்பு:

அறிவிப்பவர்: அலீ இப்னு அபீ தாலிப்(ரழி) அவர்கள், (புஹாரி 6318)

## இரவில் ஸுப்ஹானல்லாஹ் 33, அல்ஹம்துலில்லாஹ் 33, அல்லாஹு அக்பர் 34 சொல்வதன் சிறப்பு :

أنَّ فاطِمَةَ رضي الله عنها شَكَتْ ما تَلْقَى في يَدِها مِنَ الرَّحَى،
فأتَتِ النبيَّ صَلَّى اللهُ عليه وسلَّمَ تَسْأَلُهُ خادِمًا فَلَمْ تَجِدْهُ،
فَذَكَرَتْ ذلكَ لِعائِشَةَ، فَلَمَّا جاءَ أخْبَرَتْهُ، قالَ:
فَجاءَنا وقدْ أخَذْنا مَضاجِعَنا، فَذَهَبْتُ أقُومُ، فقالَ:
مَكانَكِ فَجَلَسَ بيْنَنا حتَّى وجَدْتُ بَرْدَ قَدَمَيْهِ علَى صَدْرِي، فقالَ:
ألا أدُلُّكُما علَى ما هو خَيْرٌ لَكُما مِن خادِمٍ؟ إذا أوَيْتُما إلى فِراشِكُما،
أوْ أخَذْتُما مَضاجِعَكُما، فَكَبِّرا ثَلاثًا وثَلاثِينَ، وسَبِّحا ثَلاثًا وثَلاثِينَ،
واحْمَدا ثَلاثًا وثَلاثِينَ، فَهذا خَيْرٌ لَكُما مِن خادِمٍ وعَنْ شُعْبَةَ،
عن خالِدٍ، عَنِ ابْنِ سِيرِينَ، قالَ: التَّسْبِيحُ أرْبَعٌ وثَلاثُونَ.

அறிவிப்பவர்: **அலீ இப்னு அபீ தாலிப்(ரழி) அவர்கள்,** (புஹாரி 6318)

# இரவில் ஸுப்ஹானல்லாஹ் 33, அல்ஹம்துலில்லாஹ் 33, அல்லாஹு அக்பர் 34 சொல்வதன் சிறப்பு :

(என் துணைவியார்) ஃபாத்திமா அவர்கள் (மாவு அரைக்கும்) திரிகை சுற்றியதால் தம் கையில் ஏற்பட்ட காய்ப்பு குறித்து (என்னிடம்) முறையிட்டார். இது தொடர்பாக நபியவர்களிடம் தெரிவிக்கும் படி கூறினேன். எனவே, ஒரு பணியாளரை (தமக்குத் தரும்படி) கேட்க நபி(ஸல்) அவர்களிடம் ஃபாத்திமா சென்றார்கள். ஆனால் நபி(ஸல்) அவர்கள் அப்போது வீட்டில் இல்லாததால் ஆயிஷா(ரலி) அவர்களிடம் அது பற்றிக் கூறி(விட்டுத் திரும்பலா)னார்கள். நபி(ஸல்) அவர்கள் வந்தவுடன் அவர்களிடம் ஆயிஷா(ரலி) அவர்கள் விஷயத்தை தெரிவித்தார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். அப்போது நாங்கள் படுக்கைக்குச் சென்றுவிட்டிருந்தோம். (அவர்களைக் கண்டவுடன்) நான் எழுந்திருக்க முற்பட்டேன். உடனே நபி(ஸல்) அவர்கள், ‘(எழுந்திருக்க வேண்டாம்) அந்த இடத்திலேயே இருங்கள்’ என்று கூறிவிட்டு எங்களுக்கு நடுவில் வந்து அமர்ந்தார்கள். அப்போது (என்னைத் தொட்டுக் கொண்டிருந்த) அவர்களின் பாதங்களின் குளிர்ச்சியை என்னுடைய நெஞ்சின் மீது உணர்ந்தேன். (அந்த அளவுக்கு நெருக்கமாக அமர்ந்திருந்தார்கள்.) ’பணியாளரைவிட உங்களிருவருக்கும் (பயனளிக்கும்) சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? நீங்கள் இருவரும் ‘படுக்கைக்குச் சென்றதும்’ அல்லது ‘விரிப்புக்குச் சென்றதும்’ அல்லாஹு அக்பர் (அல்லாஹ் பெரியவன்) என்று முப்பத்து நான்கு முறையும், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்) என்று முப்பத்து மூன்று முறையும், அல்ஹம்துலில்லாஹ் (புகழ் யாவும் அல்லாஹ்வுக்கே) என்று முப்பத்து மூன்று முறையும் சொல்லுங்கள். இது பணியாளைவிட உங்கள் இருவருக்கும் சிறந்ததாகும் என்றார்கள்.

அறிவிப்பவர்: **அலீ இப்னு அபீ தாலிப்(ரழி) அவர்கள்,** ( புஹாரி 6318 )

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

بِاسْمِكَ رَبِّ وَضَعْتُ جَنْبِي وَبِكَ أَرْفَعُهُ إِنْ أَمْسَكْتَ نَفْسِي
فَارْحَمْهَا وَإِنْ أَرْسَلْتَهَا فَاحْفَظْهَا بِمَا تَحْفَظُ بِهِ عِبادَكَ الصَّالِحِينَ

பிஸ்மிக ரப்பி வலஃது ஜன்பீ வபிக அர்ஃபஉஹு இன் அம்ஸக்த நஃப்ஸீ ஃபர்ஹம்ஹா வஇன் அர்ஸல்தஹா ஃபஹ்ஃபழ்ஹா பிமா தஹ்ஃபழு பிஹி இபாதகஸ் ஸாலிஹீன

“என் அதிபதியே! உன் பெயரால் என் விலாவை (தரையில்) வைத்தேன். உன் உதவியாலேயே (மீண்டும்) எழுவேன். என் உயிரை நீ கைப்பற்றிக் கொண்டால், அதற்கு நீ கருணை புரிவாயாக. அதை நீ (கைப்பற்றாமல்)விட்டுவிட்டால், உன் நல்லடியார்களை எதன் மூலம் பாதுகாப்பாயோ அதன் மூலம் என் உயிரையும் காத்திடுவாயாக)”

அறிவிப்பவர் : **அபூ ஹுரைரா (ரழி)** அவர்கள், புஹாரி 6320

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِيْ أَطْعَمَنَا
وَسَقَانَا، وَكَفَانَا وَآوَانَا، فَكَمْ مِمَّنْ لاَّ كَافِيَ لَهُ وَلَا مُؤْوِيَ.

[அல்ஹம்து லில்லாஹில் லதீ அத்அமனா, வஸகானா, வகஃபானா, வஆவானா, ஃபகம் மிம்மல் லா காஃபிஅ லஹு வலா முஃவிய]

“அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே நமக்கு உணவளித்தான்; குடிநீர் வழங்கினான்; (நம் தேவைகளை நிறைவேற்றி) போதுமான அளவுக்குக் கொடுத்தான்; (தங்க இடமளித்து) தஞ்சமளித்தான். ஆனால், போதுமாக்கிவைப்பதற்கோ தஞ்சமளிப்பதற்கோ ஆளில்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.

அறிவிப்பவர் : **அனஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 52

جمعية الـدعوة والإرشاد وتوعية الجاليـات بالخبـر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## காலையிலும், மாலையிலும், இரவில் தூங்கச் செல்லும் போதும் ஓத வேண்டிய துஆ:

اَللّهُمَّ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ فَاطِرَ السّمَاوَاتِ وَالأَرْضِ رَبَّ كُلِّ شَيْءٍ وَمَلِيْكَهُ، أَشْهَدُ أَنْ لآ إِلـهَ إِلاّ أَنْتَ، أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِيْ وَمِنْ شَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ، وَأَنْ أَقْتَرِفَ عَلَى نَفْسِيْ سُوْءاً أَوْ أَجُرَّهُ إِلَى مُسْلِمٍ

(அல்லாஹும்ம ஆலிமல் க:ய்பி வஷ்ஷஹாததி :பாதிரஸ் ஸமாவாதி வல் அர்ழி ரப்ப குல்லி ஷய்இன் வமலீகஹு அஷ்ஹது அல் லாஇலாஹ இல்லா அன்த, அஊதுபிக மின் ஷர்ரி ந:ப்ஸீ வமின் ஷர்ரிஷ் ஷய்தானி வஷிர்கிஹி வஅன் அக்தரி:ப அலா ந:ப்ஸீ ஸுஅன் அவ் அஜுர்ரஹு இலா முஸ்லிமின்)

அறிவிப்பவர்: **அபூஹுரைரா (ரழி)** அவர்கள். ஆதாரம்: திர்மிதீ 2392, அபூதாவுத் 5069

## காலையிலும், மாலையிலும், இரவில் தூங்கச் செல்லும் போதும் ஓத வேண்டிய துஆ:

மறைவானவை, மறைவில்லாதவை யாவையும் அறிந்த நாயனே! வானங்கள் மற்றும் பூமியைப் படைத்தவன்! ஒவ்வொரு பொருளின் இரட்சகன். மற்றும் அவற்றின் உரிமையாளன். வணங்கப் படுபவன் உன்னையன்றி வேறு கடவுள் இல்லை என நான் சாட்சி கூறுகின்றேன். என் மனதின் தீமையிலிருந்து, ஷைத்தானின் தீமை மற்றும் அவன் கூட்டாகுதல் ஆகியவற்றிலிருந்து, இன்னும் எனக்கே நான் தீமை செய்வதிலிருந்து அல்லது எந்த ஒரு முஸ்லிமுக்காவது நான் அதை இழுத்துச் செல்லுதலிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் காலையிலும், மாலையிலும், ஓதுவதற்கு ஒரு பிரார்த்தனையைக் கற்றுத்தருமாறு கேட்ட போது நபியவர்கள் காலையிலும், மாலையிலும், இரவிலும் ஓதுவதற்கு இப்பிரார்த்தனையைக் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்.

அறிவிப்பவர்: **அபூஹுரைரா (ரழி)** அவர்கள். ஆதாரம்: திர்மிதீ 2392, அபூதாவுத் 5069

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

اَللّٰهُمَّ قِنِىْ عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ

(அல்லாஹும்ம கினீ அதாபக யவ்த தப்அஸு இபாதக)

“யா அல்லாஹ்! உனது தண்டனையில் இருந்து என்னைக் காப்பாற்றிடு. உன் அடியார்களையெல்லாம் எழுப்பி ஒன்று திரட்டும் நாளில்.”

அறிவிப்பவர்: பராஃ இப்னு ஆஸிப் (ரழி) அவர்கள், அபூதாவுத் 5047

# இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

اللَّهُمَّ رَبَّ السَّمَوَاتِ وَرَبَّ الأَرْضِ وَرَبَّ الْعَرْشِ الْعَظِيمِ رَبَّنَا
وَرَبَّ كُلِّ شَىْءٍ فَالِقَ الْحَبِّ وَالنَّوَى وَمُنْزِلَ التَّوْرَاةِ وَالإِنْجِيلِ وَالْفُرْقَانِ
أَعُوذُ بِكَ مِنْ شَرِّ كُلِّ شَىْءٍ أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهِ اللَّهُمَّ أَنْتَ الأَوَّلُ فَلَيْسَ
قَبْلَكَ شَىْءٌ وَأَنْتَ الآخِرُ فَلَيْسَ بَعْدَكَ شَىْءٌ وَأَنْتَ الظَّاهِرُ فَلَيْسَ فَوْقَكَ
شَىْءٌ وَأَنْتَ الْبَاطِنُ فَلَيْسَ دُونَكَ شَىْءٌ اقْضِ عَنَّا الدَّيْنَ وَأَغْنِنَا مِنَ الْفَقْرِ

(அல்லாஹும்ம ரப்பஸ் ஸமாவாதி வரப்பல் அர்ழி வரப்பல் அர்ஷில் அழீம்.
ரப்பனா வரப்ப குல்லி ஷய்இன் ஃபாலிகல் ஹப்பி வந்நவா,
வமுன்ஸிலத் தவ்ராதி வல் இன்ஜீலி வல் புஃர்கானி அஊதுபிக
மின் ஷர்ரி குல்லி ஷய்இன் அன்த ஆஹிதும் பினாஸியதிஹி,
அல்லாஹும்ம அன்தல் அவ்வலு ஃபலைஸ கப்லக ஷய்உன்,
வஅன்தல் ஆகிரு ஃபலைஸ பஃதக ஷய்உன்,

அறிவிப்பவர்: **அபூஹுரைரா (ரழி)** அவர்கள். முஸ்லிம் 7064

# இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

தொடர்ச்சி...

வஅன்தழ் ழாஹிரு ஃபலைஸ ஃபவ்கக ஷய்உன், வஅன்தல் பாதினு ஃபலைஸ தூனக ஷய்உன், இன்ழி அன்னத் தைன வஅக்ஃனினா மினல் ஃபக்ரி)

பொருள்: இறைவா! வானங்களின் அதிபதியே! பூமியின் அதிபதியே! மகத்தான அரியணையின் அதிபதியே! எங்கள் இறைவா! அனைத்துப் பொருட்களின் அதிபதியே! தானிய வித்துகளையும் விதைகளையும் பிரி(த்து தாவர வர்க்கத்தை முளைப்பி)ப்பவனே! தவ்ராத், இன்ஜீல், ஃபுர்கான் (குர்ஆன்) ஆகிய வேதங்களை அருளியவனே! அனைத்துப் பொருட்களின் தீங்கிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். அவற்றின் முன்நெற்றி ரோமங்களை நீயே பிடித்துள்ளாய். இறைவா! நீயே ஆரம்பமானவன்; உனக்கு முன்னர் வேறெதுவும் இல்லை. நீயே இறுதியானவன்; உனக்குப் பின்னர் வேறெதுவும் இல்லை. நீயே மேலானவன்; உனக்கு மேலே வேறொன்றுமில்லை. நீயே அடித்தளமானவன்; உனக்குக் கீழே வேறொன்றுமில்லை. எங்கள் கடன்களை நிறைவேற்றி வைப்பாயாக! வறுமையிலிருந்து காத்து எங்களைத் தன்னிறைவு கொள்ளச்செய்வாயாக!)

அறிவிப்பவர்: **அபூஹுரைரா (ரழி)** அவர்கள். முஸ்லிம் 7064

# இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

اللَّهُمَّ بِاسْمِكَ أَمُوتُ وَأَحْيَا

## அல்லாஹும்ம பிஸ்மிக அமூது வஅஹ்யா

ஹுதைஃபா இப்னு அல்யமான்(ரலி) அறிவித்தார்.
நபி(ஸல்) அவர்கள் இரவில் படுக்கைக்கு உறங்கச் சென்ற பின்னால் தம் (வலக்) கையைத் தம் (வலக்) கன்னத்திற்குக் கீழே வைத்துக் கொள்வார்கள்.

பிறகு, 'அல்லாஹும்ம பிஸ்மிக்க அமூத்து வ அஹ்யா' (இறைவா! உன் பெயர் கூறியே இறக்கிறேன்; உயிர் வாழவும் செய்கிறேன்) என்று கூறுவார்கள். உறக்கத்திலிருந்து எழும்போது

'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஅத மா அமாத்தனா வஇலைஹிந் நுஷூர்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும், (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்லவேண்டியுள்ளது) என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர்: ஹுதைஃபா (ரழி) அவர்கள், புஹாரி 6314

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

اللَّهُمَّ أَسْلَمْتُ نَفْسِي إِلَيْكَ وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ وَأَلْجَأْتُ ظَهْرِي

إِلَيْكَ رَهْبَةً وَرَغْبَةً إِلَيْكَ لاَ مَلْجَأَ ، وَلاَ مَنْجا مِنْكَ إِلاَّ إِلَيْكَ

آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ

(அல்லாஹும்ம அஸ்லம்து ந:ப்ஸீ இலைக, வ:பவ்வழ்து அம்ரீ இலைக,
வஅல்ஜ:து ழஹ்ரீ இலைக, ரஹ்பதன் வரக்:பதன் இலைக,
லா மல்ஜஅ வலாமன்ஜா மின்க இல்லா இலைக, ஆமன்து
பிகிதாபிகல் லதீ அன்ஸல்த, வபிநபிய்யீகல் லதீ அர்ஸல்த)

அறிவிப்பவர்: பராஉ இப்னு ஆஸிப்(ரழி) அவர்கள் , புஹாரி 6311

# இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்கள்:

நீ உன் படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்காக அங்கசுத்தி (உளூ) செய்வது போன்று அங்கசுத்தி செய்துகொள். பிறகு உன் வலப்பக்கத்தின் மீது சாய்ந்து படு.

பிறகு, 'அல்லாஹும்ம அஸ்லம்த்து நஃப்ஸீ இலைக்க. வ ஃபவ்வளத்து அம்ரீ இலைக்க. வ அல்ஜஃத்து ழஹ்ரீ இலைக்க. ரஃக்பத்தன் வ ரஹ்பத்தன் இலைக்க. லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க்க இல்லா இலைக்க. ஆமன்த்து பி கித்தாபிக்கல்லதீ அன்ஸல்த்த வபி நபிய்யிக்கல்லதீ அர்சல்த்த' என்று ஓதிக்கொள்.

(பொருள்: இறைவா! உனக்கு நான் கீழ்ப்படிந்தேன். காரியம் அனைத்தையும் உன்னிடம் ஒப்படைத்தேன். என் விவகாரங்கள் அனைத்திலும் உன்னையே சார்ந்திருக்கிறேன். உன் மீதுள்ள ஆவலிலும் அச்சத்திலும் தான் (இவற்றை செய்தேன்). உன்னிடமிருந்து தப்பிக்கவும் ஒதுங்கிடவும் உன்னைத் தவிர வேறு போக்கிடமில்லை. நீ அருளிய உன்னுடைய வேதத்தையும், நீ அனுப்பி வைத்த உன்னுடைய நபியையும் நான் நம்பினேன். (இவ்வாறு நீ பிரார்த்தனை செய்து விட்டு உறங்கி அன்றைய இரவில் நீ இறந்துவிட்டால் (இஸ்லாம் எனும்) இயற்கை மரபில் இறந்தவனாவாய். இந்தப் பிரார்த்தனையை (இரவின்) இறுதிப்பேச்சாக ஆக்கிக்கொள்.

அறிவிப்பவர்: **பராஉ இப்னு ஆஸிப்(ரழி)** அவர்கள் , புஹாரி 6311

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் எதிர்பாராத விதமாக விழித்தவர் ஓத வேண்டியது:

لاَإِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

الْحَمْدُ لِلَّهِ وَسُبْحَانَ اللهِ، وَلاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَاللَّهُ أَكْبَرُ،

وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللَّهِ اللَّهُمَّ اغْفِرْ لِي

(லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர். அல்ஹம்து லில்லாஹி, வஸுப்ஹானல்லாஹி, வலா இலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர், வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி, அல்லாஹும்மஃ ஃபிர்லீ.)

என உபதா இப்னு ஸாமித்(ரழி) அறிவித்தார். புஹாரி 1154

# இரவில் எதிர்பாராத விதமாக விழித்தவர் ஓத வேண்டியது:

‘யார் இரவில் விழித்து வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. அவன் ஏகன்; அவனுக்கு நிகரானவர் இல்லை; ஆட்சியும் அவனுக்குரியது; புகழும் அவனுக்குரியது; அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுள்ளவன். அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவன் தூயவன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் தூயவன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை.

அவன் மிகப்பெரியவன் நன்மை செய்யும் ஆற்றலும் தீமையில் இருந்து விடுபடுவதும் அவனைக் கொண்டே இருக்கிறது என்று கூறிவிட்டு இறைவா! என்னை மன்னித்துவிடு என்றோ, வேறு பிரார்த்தனைகளையோ செய்தால் அவை அங்கீகரிக்கப்படும். உளூச் செய்து தொழுதால் அத்தொழுகை ஒப்புக் கொள்ளப்படும். என உபதா இப்னு ஸாமித்(ரலி) அறிவித்தார்.

**என உபதா இப்னு ஸாமித்(ரழி) அறிவித்தார். புஹாரி 1154**

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் கெட்ட கனவு கண்டால் கூற வேண்டியவை:

**அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம்** أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**அஊது பில்லாஹி மின்ஹு** أَعُوْذُ بِاللهِ مِنْهُ

அந்தத் தீய கனவை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

عن أبي قتادة الحارث بن ربعي رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال

الرُّؤْيا مِنَ اللهِ،والحُلْمُ مِنَ الشَّيْطانِ، فإذا حَلَمَ أحَدُكُمُ الحُلُمَ يَكْرَهُهُ

فَلْيَبْصُقْ عن يَسارِهِ، ولْيَسْتَعِذْ باللَّهِ منه، فَلَنْ يَضُرَّهُ.

உங்களில் எவரேனும் தாம் விரும்பாத தீய கனவு கண்டால் உடனே அவர் தம் இடப் பக்கத்தில் துப்பட்டும்.

ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பும் கோரட்டும்.

அப்போது அவருக்கு அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திட இயலாது.

(அறிவிப்பவர்: **அபூ கத்தாதா ரலியல்லாஹு அன்ஹு** அவர்கள்,புஹாரி 7005).

# இரவில் கெட்ட கனவு கண்டால் கூற வேண்டியவை:

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ مِنْ غَضَبِهِ وَعِقَابِهِ

وَشَرِّ عِبَادِهِ وَمِنْ هَمَزَاتِ الشَّيَاطِينِ وَأَنْ يَحْضُرُونِ

(அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மதி மின் கஃழபிஹி வஇகாபிஹி

வஷர்ரி இபாதிஹி வமின் ஹமஸாதிஷ் ஷயாதீனி வஅன்ய் யஹ்ழுரூன்).

அல்லாஹ்வின் பரிபூர்ண வார்த்தைகளைக் கொண்டு அவனது
கோபத்தை விட்டும், அவனது தண்டனையை விட்டும், அவனது
அடியார்களின் தீங்கை விட்டும், ஷைத்தான்களின் ஊசலாட்டங்களை
விட்டும் அவை சமூகதம் தரும் போது நான் பாதுகாப்புத் தேடுகிறேன்,
எனக் கூறினால் அந்தக் கனவு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது
என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அம்ரிப்னுல் ஆஸ் (ரழி)** அவர்கள், அபூதாவுத் 3893

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை

## இரவில் தூக்கத்திலிருந்து விழித்துவுடன் ஓத வேண்டிய துஆ:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا، وَإِلَيْهِ النُّشُوْرُ

**(அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமாத்தனா வஇலைஹிந் நுஷூர்)**

ஹுதைஃபா இப்னு அல்யமான்(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள்........ இரவில் உறக்கத்திலிருந்து எழும்போது

'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஅத மா அமாத்தனா வஇலைஹிந் நுஷூர்'

(எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர்

எங்களுக்கு உயிரூட்டினான். மேலும், (மண்ணறையிலிருந்து வெளியேறி)

அவனிடமே செல்ல வேண்டியுள்ளது) என்றுவெளியேறி

அவனிடமே செல்ல வேண்டியுள்ளது) என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர்: ஹுதைஃபா (ரழி) அவர்கள், புஹாரி 6314

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

**நபி ஸல் அவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்து பல் துலக்கி வுழூச் செய்து ஆலு இம்ரான் அத்தியாயத்தின் இன்ன ஃபீ ஹல்கிஸ் ஸமாவாத்தி முதல் இறுதி வரை (3: 190 முதல் 200 வரை உள்ள வசனங்களை) ஓதினார்கள்.**

اِنَّ فِىۡ خَلۡقِ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ وَاخۡتِلَافِ الَّيۡلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِى الۡاَلۡبَابِ

நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும்; இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன. (3: 190)

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 763

# (ஆலு இம்ரான் அத்தியாயத்தின் : 190 முதல் 200 வரை உள்ள வசனங்கள்)

الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللّٰهَ قِيَامًا وَّقُعُوْدًا وَّعَلٰى جُنُوْبِهِمْ وَيَتَفَكَّرُوْنَ فِىْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ

رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا ۚ سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ

அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங்களில் (சாய்ந்து) இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள்; வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, “எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை; நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!” (என்றும்;) (3: 191)

---

رَبَّنَاۤ اِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ اَخْزَيْتَهٗ ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ

எங்கள் இறைவனே! நீ எவரை நரக நெருப்பில் புகுத்துகின்றாயோ அவரை நிச்சயமாக நீ இழிவாக்கிவிட்டாய்; மேலும் அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் எவருமிலர்!” (என்றும்;) (3: 192)

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 763

# (ஆலு இம்ரான் அத்தியாயத்தின் : 190 முதல் 200 வரை உள்ள வசனங்கள்)

رَبَّنَآ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِىْ لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا ۖ

رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ ۚ

எங்கள் இறைவனே! உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஈமானின் பக்கம் அழைத்தவரின் அழைப்பைச் செவிமடுத்து நாங்கள் திடமாக ஈமான் கொண்டோம்; "எங்கள் இறைவனே! எங்களுக்கு, எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களை விட்டும் அகற்றி விடுவாயாக; இன்னும், எங்க(ளுடைய ஆன்மாக்க)ளைச் சான்றோர்களு(டைய ஆன்மாக்களு)டன் கைப்பற்றுவாயாக!" (என்றும்;) (3: 193)

---

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ؕ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

"எங்கள் இறைவனே! இன்னும் உன் தூதர்கள் மூலமாக எங்களுக்கு நீ வாக்களித்ததை எங்களுக்குத் தந்தருள்வாயாக! கியாம நாளில் எங்களை இழிவுபடுத்தாது இருப்பாயாக! நிச்சயமாக நீ வாக்குறுதிகளில் மாறுபவன் அல்ல (என்றும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்).(3: 194)

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 763

(ஆலு இம்ரான் அத்தியாயத்தின் : 190 முதல் 200 வரை உள்ள வசனங்கள்)

فَاسۡتَجَابَ لَهُمۡ رَبُّهُمۡ اَنِّىۡ لَاۤ اُضِيۡعُ عَمَلَ عَامِلٍ مِّنۡكُمۡ مِّنۡ ذَكَرٍ اَوۡ اُنۡثٰى ۚ بَعۡضُكُمۡ مِّنۡۢ بَعۡضٍ ۚ
فَالَّذِيۡنَ هَاجَرُوۡا وَاُخۡرِجُوۡا مِنۡ دِيَارِهِمۡ وَاُوۡذُوۡا فِىۡ سَبِيۡلِىۡ وَقٰتَلُوۡا وَقُتِلُوۡا لَاُكَفِّرَنَّ عَنۡهُمۡ سَيِّاٰتِهِمۡ
وَلَاُدۡخِلَنَّهُمۡ جَنّٰتٍ تَجۡرِىۡ مِنۡ تَحۡتِهَا الۡاَنۡهٰرُۚ ثَوَابًا مِّنۡ عِنۡدِ اللّٰهِ ؕ وَاللّٰهُ عِنۡدَهٗ حُسۡنُ الثَّوَابِ

ஆதலால், அவர்களுடைய இறைவன் அவர்களுடைய இப்பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான்; “உங்களில் ஆணோ, பெண்ணோ எவர் (நற்செயல் செய்தாலும்) அவர் செய்த செயலை நிச்சயமாக வீணாக்க மாட்டேன், (ஏனெனில் ஆணாகவோ, பெண்ணாகவோ இருப்பினும்) நீங்கள் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தாம்; எனவே யார் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறினார்களோ மேலும் வெளியேற்றப்பட்டார்களோ, மேலும் என் பாதையில் துன்பப்பட்டார்களோ, மேலும் போரிட்டார்களோ, மேலும் (போரில்) கொல்லப்பட்டார்களோ, அவர்களுடைய தீமைகளை அவர்களை விட்டும் நிச்சயமாக அகற்றி விடுவேன்; இன்னும் அவர்களை எவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றனவோ அந்தச் சுவனபதிகளில் நிச்சயமாக நான் புகுத்துவேன்” (என்று கூறுவான்); இது அல்லாஹ்விடமிருந்து (அவர்களுக்குக்) கிட்டும் சன்மானமாகும்; இன்னும் அல்லாஹ்வாகிய அவனிடத்தில் அழகிய சன்மானங்கள் உண்டு (3: 195)

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள், முஸ்லிம் 763

(ஆலு இம்ரான் அத்தியாயத்தின் : 190 முதல் 200 வரை உள்ள வசனங்கள்)

لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِيْنَ كَفَرُوْا فِى الْبِلَادِؕ

காஃபிர்கள் நகரங்களில் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருப்பது (நபியே!) உம்மை மயக்கி விடவேண்டாம்.(3: 196)

مَتَاعٌ قَلِيْلٌ ثُمَّ مَاْوٰٮهُمْ جَهَنَّمُ‌ؕ وَبِئْسَ الْمِهَادُ

(அது) மிகவும் அற்ப சுகம்; பிறகு அவர்கள் தங்குமிடம் நரகமே யாகும்; (இது) மிகவும் கெட்ட தங்குமிடமும் ஆகும். (3: 197)

لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ جَنّٰتٌ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا نُزُلًا مِّنْ عِنْدِ اللّٰهِ‌ؕ وَمَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ لِّلْاَبْرَارِ

ஆனால், எவர் தங்கள் இறைவனுக்கு பயபக்தியுடன் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஆறுகள் கீழே ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகள் உண்டு அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பர்: (இது) அல்லாஹ்விடமிருந்து (நல்லோருக்குக் கிடைக்கும்) விருந்தாகும்; மேலும் சான்றோருக்கு அல்லாஹ்விடம் இருப்பதே மேன்மையுடையதாகும். (3: 198)

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 763

# (ஆலு இம்ரான் அத்தியாயத்தின் : 190 முதல் 200 வரை உள்ள வசனங்கள்)

وَاِنَّ مِنۡ اَهۡلِ الۡكِتٰبِ لَمَنۡ يُّؤۡمِنُ بِاللّٰهِ وَمَاۤ اُنۡزِلَ اِلَيۡكُمۡ وَمَاۤ اُنۡزِلَ اِلَيۡهِمۡ خٰشِعِيۡنَ لِلّٰهِ ۙ

لَا يَشۡتَرُوۡنَ بِاٰيٰتِ اللّٰهِ ثَمَنًا قَلِيۡلًا ؕ اُولٰٓٮِٕكَ لَهُمۡ اَجۡرُهُمۡ عِنۡدَ رَبِّهِمۡ ؕ اِنَّ اللّٰهَ سَرِيۡعُ الۡحِسَابِ

மேலும் நிச்சயமாக வேதமுடையோரில் சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் மீதும் உங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)திலும், அவர்களுக்கு இறக்கப்பட்ட (மற்ற)வற்றிலும் நம்பிக்கை வைக்கிறார்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை அற்ப விலைக்கு விற்கமாட்டார்கள்; இத்தகையோருக்கு நற்கூலி அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; நிச்சயமாக அல்லாஹ் கணக்கு வாங்குவதில் மிகவும் தீவிரமானவன்.(3:199. )

---

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوا اصۡبِرُوۡا وَصَابِرُوۡا وَرَابِطُوۡا وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمۡ تُفۡلِحُوۡنَ

முஃமின்களே! பொறுமையுடன் இருங்கள்; (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள்; (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்; (இம்மையிலும், மறுமையிலும்) நீங்கள் வெற்றியடைவீர்கள்! (3:200)

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 763

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## நபி ஸல் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழுந்தால் ஓதும் துஆ

இந்த துஆவை தஹஜ்ஜுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் நபியவர்கள்
ஓதுவதாக அபூ உவானா என்ற நூலில் ஒரு அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

اللَّهُمَّ لَكَ الحَمْدُ أَنتَ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ، وَلَكَ الحَمْدُ أَنْتَ قَيِّمُ السَّمَوَاتِ وَالأَرْضِ،
وَلَكَ الحَمْدُ أَنْتَ رَبُّ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، أَنْتَ الحَقُّ ، وَوَعْدُكَ الحَقُّ،
وَقَوْلُكَ الحَقُّ، وَلِقَاؤُكَ الحَقُّ، وَالجَنَّةُ حَقٌّ، وَالنَّارُ حَقٌّ، وَالنَّبِيُّونَ حَقٌّ، وَالسَّاعَةُ حَقٌّ،
اللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ ، وَإِلَيْكَ أَنَبْتُ ، وَبِكَ خَاصَمْتُ،
وَإِلَيْكَ حَاكَمْتُ، فَاغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ، وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ،
أَنْتَ إِلَهِي لاَ إِلَهَ إِلَّا أَنْتَ

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 1758

# நபி ஸல் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழுந்தால் ஓதும் துஆ

**இந்த துஆவை தஹஜ்ஜுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் நபியவர்கள் ஓதுவதாக அபூ உவானா என்ற நூலில் ஒரு அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.**

அல்லாஹும்ம லகல் ஹம்து அன்த நூருஸ் ஸமாவாதி வல் அர்ழி,
வலகல் ஹம்து அன்த கய்யிமுஸ் ஸமாவாதி வல் அர்ழி,
வலகல் ஹம்து அன்த ரப்புஸ் ஸமாவாதி வல் அர்ழி வமன் ஃபீஹின்ன,
அன்தல் ஹக்கு, வவஃதுகல் ஹக்கு, வகவ்லுகல் ஹக்கு,
வலிகாஉகல் ஹக்கு, வலஜன்னது ஹக்குன், வந்நாரு ஹக்குன்,
வந்நபிய்யூன ஹக்குன், வஸ்ஸாஅது ஹக்குன்,
அல்லாஹும்ம லக அஸ்லம்து, வபிக ஆமன்து,
வஅலைக தவக்கல்து, வஇலைக அனப்து, வபிக காஸம்து,
வஇலைக ஹாகம்து, ஃபக்ஃபிர்லீ மா கத்தம்து வமா அக்கர்து,
வமா அஸ்ரர்து, வமா அஃலன்து, அன்த இலாஹீ லா இலாஹ இல்லா அன்த.

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 1758

# நபி ஸல் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழுந்தால் ஓதும் துஆ

**இந்த துஆவை தஹஜ்ஜுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் நபியவர்கள் ஓதுவதாக அபூ உவானா என்ற நூலில் ஒரு அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.**

இறைவா! உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் மற்றும் பூமியின் ஒளி நீயே. உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றை நிர்வகிப்பவன் நீயே. உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள், பூமி மற்றும் அவற்றிலுள்ளவற்றின் இறைவன் நீயே. நீ உண்மையே. உன் வாக்குறுதி உண்மையே. உனது கூற்று உண்மையே. உன் தரிசனம் உண்மை. சொர்க்கம் உண்மை. நரகம் உண்மை. மறுமை நாள் உண்மை. அல்லாஹ்வே! உனக்கே கட்டுப்பட்டேன். உன்மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். உன்னையே சார்ந்துள்ளேன். உன்னிடமே திரும்புகிறேன். உன்னிடமே வழக்காடுவேன். உன்னிடமே நீதி கேட்பேன். எனவே, நான் முந்திச் செய்த, பிந்திச் செய்கிற, இரகசியமாகச் செய்த, பகிரங்கமாகச் செய்த  பாவங்களை மன்னிப்பாயாக. நீயே என் இறைவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை.

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 1758

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# இரவில் ஓத வேண்டியவை

## இரவுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆ:

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ السَّمَوَاتِ وَالأَرْضِ عَالِمَ الْغَيْبِ

وَالشَّهَادَةِ أَنْتَ تَحْكُمُ بَيْنَ  عِبَادِك فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ اهْدِنِى لِمَا اخْتُلِفَ

فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِك إِنَّك تَهْدِى مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராஈல, வமீகாஈல, வஇஸ்ரா:ஃபீல, :ஃபாதிரஸ் ஸமாவாதி வல் அர்ழி ஆலிமல் க:ஃய்பி வஷ்ஷஹாததி அன்த தஹ்குமு பைன இபாதிக :ஃபீமா கானு :ஃபீஹி யக்தலி:ஃபூன, இஹ்தினீ லிமக் துலி:ஃப :ஃபீஹி மினல் ஹக்கி பிஇத்னிக இன்னக தஹ்தீ மன் தஷாஉ இலா ஸிராதிம் முஸ்தகீம்

# இரவுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆ:

இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ராஃபீல் ஆகியோரின் அதிபதியே! வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து (மறுமையில்) தீர்ப்பு வழங்குவாய். (பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்திய (மார்க்க)த்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.

அபூ ஸலாம் இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரஹிமஹுல்லாஹ் ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபியவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்தால் எதைக் கொண்டு இரவுத் தொழுகையை ஆரம்பிப்பார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த துஆவைக் கொண்டு என பதிலளித்தார்கள். முஸ்லிம் 1847

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை

## இரவுத் தொழுகையில் ஸுஜூதில் ஓத வேண்டிய துஆ:

اللَّهُمَّ أَعُوذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ

وَأَعُوذُ بِكَ مِنْكَ لاَ أُحْصِى ثَنَاءً عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

அல்லாஹும்ம அஊது பிரிழாக மின் ஸகதிக, வபிமுஆஃபாதிக மின் உகூபதிக,

வஊது பிக மின்க லா உஹ்ஸி ஸநாஅன் அலைக அன்த கமா அஸ்னைத அலா நஃப்ஸிக

அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி) அவர்கள், முஸ்லிம் 1118

# இரவுத் தொழுகையில் ஸுஜூதில் ஓத வேண்டிய துஆ:

யா அல்லாஹ் உனது திருப்பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டும், உன்னைக் கொண்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீயே உன்னைப் புகழ்ந்தது போன்று உன்னை முழுமையாகப் புகழ என்னால் முடியாது (அதற்கு நான் சக்தி பெற மாட்டேன்). யா அல்லாஹ் உனது திருப்பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டும், உன்னைக் கொண்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீயே உன்னைப் புகழ்ந்தது போன்று உன்னை முழுமையாகப் புகழ என்னால் முடியாது (அதற்கு நான் சக்தி பெற மாட்டேன்). இரவுத் தொழுகையின் ஸுஜூதில் நபியவர்கள் இவ்வாறு ஓதுபவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பவர்: **ஆயிஷா (ரழி)** அவர்கள், முஸ்லிம் 1118

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## பஃஜ்ருக்கு மஸ்ஜிதுக்கு செல்லும் போது ஓதும் துஆ:

اللَّهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُورًا وَفِي بَصَرِي نُورًا
وَفِي سَمْعِي نُورًا وَعَنْ يَمِينِي نُورًا وَعَنْ يَسَارِي نُورًا
وَفَوْقِي نُورًا وَتَحْتِي نُورًا وَأَمَامِي نُورًا وَخَلْفِي نُورًا وَاجْعَلْ لِي نُورًا

அல்லாஹும்ம ஜ்அல் ஃபீ கல்பீ நூரா, வஃபீ பஸரீ நூரா, வஃபீ ஸம்ஈ நூரா, வஅன்ய் யமீனீ நூரா, வஅன்ய் யஸாரீ நூரா, வஃபவ்கீ நூரா, வதஹ்தீ நூரா, வஅமாமீ நூரா, வக்லஃபீ நூரா, வஜ்அல்லீ நூரா

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 6316

## ஃபஜ்ருக்கு மஸ்ஜிதுக்கு செல்லும் போது ஓதும் துஆ:

இறைவா! என் இதயத்தில் ஒளியை ஏற்படுத்துவாயாக.

என் பார்வையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

என் செவியிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

என் வலப் பக்கத்திலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

என் இடப்பக்கத்திலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

எனக்கு மேலேயும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

எனக்கு முன்னாலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

எனக்குப் பின்னாலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

எனக்கு (எல்லாத் திசையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.)

(அறிவிப்பவர்: **அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)** அவர்கள், முஸ்லிம் 6316

هداية

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

தொகுப்பாளர் : **அஷ்ஷைக் அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி**

அழைப்பாளர் – அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம், தமிழ் பிரிவு